**09.02.2026**

**I.A.No.10/2026 மற்றும் 11/2026 in O.S.No.583/2014 மனு அனுமதிக்கப்பட்டு பி.சா.2 ஆதிலஷ்மி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனக்கு திருமணம் ஆகி எத்தனை வருடமாகும் என்றால் சுமாராக 35 வருடங்கள் ஆகும். திருமணம் ஆன பிறகு சென்னையில்தான் குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். எனக்கு தனிபட்ட முறையில் எந்த வருமானமும் கிடையாது என்றால் சரிதான். தாவாசொத்தின் விவரம் மற்றும் அதன் விஸ்தீரணம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. தாவாசொத்து எனது அப்பா பெயரில் உள்ளது மற்றும் கிராமத்தில் உள்ளது என்ற விவரம் மட்டும் தெரியும் மற்ற விவரங்கள் தெரியாது. கிணறு உள்ளது என்றால் சரிதான். எந்த சொத்தில் கிணறு அமைந்துள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் எனது அப்பா எனது கணவர் பெயருக்கு சொத்தை கிரையம் கொடுத்துவிட்டார். எப்போது எந்த வருடம், எந்த ஆவணத்தில் எழுதி கொடுத்தார் என்றால் வருடம் தெரியாது, ஆனால் பொது அதிகாரம் பத்திரம் மூலம் எழுதி கொடுத்தர்.

2. பொது அதிகாரம் பத்திரம் எழுதும்போது நான் செல்லவில்லை அதனால் அதை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது கணவர் கூலி வேலைதான் செய்து வந்தார் அதனால் எந்த வருமானமும் கிடையாது, எனது மகன்கள்தான் வேலை பார்த்து வருகிறார்கள். எனக்கு

1 மகள் மற்றும் 2 மகன் ஆவார்கள். தற்போது எனது மூத்த மகனுக்கு 34 வயதாகிறது. எனது கணவர் கூலி வேலை செய்து பெரியதாக வருமானம் கிடையாது, அதனால் பெரிய சேமிப்பு கிடையாது என்றால் சரியல்ல. அவர் வருமானத்தை வைத்து நாங்கள் சேமித்து வைத்தோம்.

3. எப்போது எனது கணவர் என் அப்பாவிற்கு ரூ.3,00,000 பணம் கொடுத்தார் என்றால் எனக்கு தேதி, வருடம் தெரியாது. ஆனால் பத்திரம் பதிவு செய்யும்போது கொடுத்தார். என் பெயருக்கு எந்த வருடம் கிரையம் ஏற்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் வருடம் தெரியாது. எவ்வளவு மதிப்பீட்டிற்கு கிரையம் எழுதினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவாசொத்திற்கு பட்டா என் பெயரில்தான் உள்ளது. பட்டா என் பெயரில் எப்போது வழங்கபட்டது என்றால் எனக்கு தெரியாது, பட்டா வழங்குவதற்கு என்னை விசாரணை செய்யவில்லை. அந்த பட்டா விவரங்களும் எனக்கு தெரியாது. 6ம் பிரதிவாதி பச்சையப்பன் எனது தம்பி என்றால் சரிதான். அவருக்கு என் மகளை திருமணம் செய்து கொடுத்துள்ளேன். அவரும் எங்களுடன் சென்னையில் குடியிருந்து வருகிறார்.

4. தாவாசொத்தில் தற்போது என்ன பயிர் செய்து வருகிறோம் என்றால் நெல் மற்றும் வேரக்கடலை பயிர் வைத்து வருகிறோம். எந்த வகை நெல் பயிர் என்றால் எனக்கு தெரியாது. தாவாசொத்தில் எந்த சர்வே எண்ணில் நெல் மற்றும் வேரக்கடலை பயிர் செய்து வருகிறோம் என்றால் சர்வே எண் தெரியாது ஆனால் நெல் பயிர் செய்து வருகிறோம். நான்

உண்மையிலே பயிர் வைத்திருந்தால் எத்தனை ஏக்கரில் என்ன பயிர் வைத்துள்ளேன் என்று தெரிந்திருக்கும் அவ்வாறு பயிர் செய்யாததால்தான் குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை என்றால் சரிதான். நான் சென்னையில் வசித்து வரும்போது எப்படி தாவா கிராமத்தில் பயிர் செய்து வருகிறோம் என்றால் எனது கணவர் பராமரித்து வருகிறார்.

**5**. நெல் பயிருக்கு தினமும் நீர் பாய்ச்ச வேண்டும், வாரத்திற்கு ஒரு முறை சென்றால் பயிர் வாடி விடும் என்றால் எனது கணவர் அருகில் இருப்பவர்களிடம் சொல்லி தண்ணீர் பாய்ச்சுவார். எனது அப்பா கிணறு தூர் வாருவதற்காக எனது கணவரிடம் ரூ.**10,000** கடன் பெற்றார் அதற்காக அடமானம் பத்திர பதிவு செய்வதற்காகதான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றார், அப்போது எனது கணவர் அடமானம் பத்திரத்திற்கு பதிலாக பொது அதிகாரம் பத்திரம் எழுதி வாங்கிவிட்டார் மேலும் எனது அப்பாவிற்கு படிக்க தெரியாத காரணத்தினால் அது தெரியவில்லை என்றால் சரியல்ல.

**6**. எனது அப்பா மற்றும் தம்பிக்கு படிக்க தெரியாது என்றால் தெரியும், எனது அப்பா **5** வகுப்பு மற்றும் தம்பி **8** வகுப்பு படித்துள்ளார்கள். மேற்சொன்ன பொது அதிகாரம் பத்திரத்தை வைத்து எனது கணவர் எனக்கு கிரையம் கொடுத்ததாக பொய்யன கிரைய பத்திரம் **24.08.2011** ஆண்டில் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. மேற்சொன்ன பத்திரம்படி தாவாசொத்தை எந்த காலத்திலும் நாங்கள் அனுபவித்தது கிடையாது என்றால் சரியல்ல. பொது அதிகார பத்திரம் முன்னிலைக்கு எனது கணவர்

தாவாசொத்தை எந்த காலத்திலும் பராமரித்தது கிடையாது, அதனால் பொது அதிகார பத்திரம் உண்மையானது அல்ல என்றால் சரியல்ல. எனது அப்பாதான் தாவாசொத்தை அனுபவித்து வந்தார், எந்த காலத்திலும் பொது அதிகார முகவரான எனது கணவரோ அல்லது நானோ தாவாசொத்தை அனுபவித்தது கிடையாது என்றால் சரியல்ல. எனவே மேற்சொன்ன பத்திரம் செல்ல கூடியதல்ல, அது ரத்து செய்ய வேண்டும் என்றால் சரியலல். எனது அப்பா இறந்தபிறகு 2ம் வாதிதான் பயிர் செய்து வருகிறார் என்றால் சரியல்ல, அவரும் நானும் சேர்ந்துதான் பயிர் வைத்த வருகிறோம்.

7. எனது கணவர் பெயரில் ஏற்படுத்திய பொது அதிகார பத்திரம் நடைமுறைக்கு வரவேவில்லை, எனது அப்பாதான் தொடர்ந்து தாவாசொத்தை அனுபவித்து வந்ததால் பொது அதிகார பத்திரம் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. 2013ம் வருடம் ஏப்ரல் மாதத்தில் தாவாசொத்தை 3ம் நபர்களுக்கு விற்பனை செய்ய முயற்சித்த போது தான் தாவாசொத்திற்கு சம்பந்தமாக எனது கணவர் ஏமாற்றி எழுதி வாங்கிய பொது அதிகார பத்திரம் மற்றும் என் பெயரில் உள்ள கிரைய பத்திரம் வாதிக்கு தெரிய வந்தது என்றால் சரியல்ல. எனவே தாவாசொத்தை பாராதீனம் செய்வதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. எனவே வாதி கோரியபடி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியில்ல.